செய்தி வெளியீடு எண்:573 நாள் :13.11.2015

# செய்தி வெளியீடு

தமிழக அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் பெருமளவில் இந்திய தொழிலாளர்களை குறிப்பாக தமிழக தொழிலாளர்களை பல்வேறு நாடுகளில் பணியமர்த்தி வருகிறது. இந்நிறுவனத்தின் செயலாக்கத்தினை மேலும் பரவலாக்கும் பொருட்டு வெளிநாட்டிற்கு பெருமளவில் தொழிலாளர்களை பணியமர்த்த முடிவு செய்துள்ளது.

எனவே, வெளிநாட்டின் வேலையளிப்போரிடமிருந்து பெருமளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு பெற்றுத் தருவதுடன் இந்திய தொழிலாளர்களை பணியமர்த்துவதற்கான நடைமுறைகள் அறிந்த ஆலோசகர்கள் (Consultant) தேவைப்படுகிறார்கள். ஆலோசகர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்கான விரிவான விதிமுறைகள் அடங்கிய விவரங்கள் www.omcmanpower.com என்ற இந்நிறுவன வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, உரிய தகுதி மற்றும் அனுபவம் உள்ள ஆலோசகர்கள் (Consultant) தங்களின் விருப்பத்துடன் வலைதளத்தில் குறிப்பிட்டுள்ள படிவங்களை பூர்த்தி செய்து 25.11.2015க்குள் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். குறிப்பிட்டுள்ள படிவங்களில் கோரியுள்ள உரிய விவரங்கள் மற்றும் சான்றிதழ்களின் நகல்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**